RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2039

# இயேசு காவியம் கூறும் பெண்ணிய சிந்தனைகள்

அ. றோஸ் [அ], ஜி. ஜினிலா [அ]

[அ] தமிழ் துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி, மார்த்தாண்டம், கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.

# Feminist Ideas That Jesus Says

A. Rose [a, *], G. Jinila [a]

[a] Department of Tamil, Nesamony Memorial Christian College, Marthandam, Kanyakumari- 629165, Tamil Nadu, India.

Corresponding Author:
rsjoseyphus@gmail.com

Received : 26-01-2020
Accepted : 5-05-2020

**ABSTRACT**

The birth of Jesus Christ in the Epic of Jesus. Many feminist ideas are expressed not only in speeches but also in his miracles and teachings. For example, feminist ideas such as the pride of motherhood, the privilege of chastity, the high attitudes of egoism, and the difficulties women face with inequality, have been explored in this article based on Jesus' epic.

**Keywords:** Religion, History, Tamil, Feminist

## ஆய்வுச் சுருக்கம்

கவியரசு கண்ணதாசன் அவர்களால் இயற்றப்பட்ட இயேசு காவியத்தில் இறை மைந்தன் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, சொற்பொழிவுகள் மட்டுமின்றி அவர் செய்த அற்புதங்களின் வாயிலாகவும், உபதேசங்களின் வாயிலாகவும் பலப் பெண்ணியச் சிந்தனைகள் வெளிப்பட்டு நிற்கின்றன. உதாரணமாக தாய்மையின் பெருமை, கற்பு நிலையின் சிறப்பு, ஈகை போன்ற உயர்ந்த மனநிலைகள், சமத்துவமின்மையினால் பெண்கள் அடையும் இடர்பாடுகள், போன்ற பெண்ணியக் கருத்துக்கள் இயேசு காவியத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

## முன்னுரை

பெண்கள் இயல்பாகவே பொறுமையும், இரக்க குணமும் உடையவர்கள். முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன் வரை பெண்கள் சமையலறைக்கு உரியவர்களாக, குடும்ப பராமரிப்பாளர்களாக மட்டும் விளங்கினர். ஆனால் இன்று நிலைமை அதி வேகமாக மாறிவருகிறது. இன்றைய பெண்கள் குடும்பத்தையும் பராமரித்துக்கொண்டு வெளி வேலைகளையும் வெற்றிகரமாகச் செய்து வருகின்றனர். இக்கட்டுரையில் பெண்ணியம்,

பெண்கள் பற்றி அறிஞர்கள் கருத்து, தாய்மை, கற்பு, ஈகை, விதவையின் கொடை, விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் என பெண்கள் குறித்த கருத்துக்களை ஆராயப்பட்டுள்ளது.

## பெண்ணியம் விளக்கம்

Feminism என்ற ஆங்கிலச் சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுவர். இச்சொல் Femina என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது ஆகும். பெண்ணியம் என்பது பெண்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முயல்வதாகும். பெண்கள் இன்று பெற்றிருக்கும் சமூகத் தகுதிநிலை பற்றியும் அதன் விளைவால் ஏற்படக்கூடிய சிக்கல் பற்றியும் சிக்கலினால் பெண்களுக்கு உண்டாகும் துன்பத்தை போக்குவது பற்றியும், இன்றைய சமுதாயம் அறிந்து கொள்ளும் நோக்கில் சிந்தனைச் செய்வது, எழுதுவது, பேசுவது பெண்ணியம் எனப்படுகிறது.

## அறிஞர்கள் கருத்து

பெண்ணியம் ஒரு சமுதாயத்தின் வரலாறு, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் இவைகளை பொறுத்து மாறுபடும் இயல்பினை உடையது. "பெண்கள் சமூகத்திலும், அலுவல்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும், பெண்களும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயல்படும் முயற்சிகளும் பெண்ணியம் என்று முத்துச் சிதம்பரம் கூறுகிறார் (Muthu Chidambaram, 2003).

பெண்ணியவாதி என்பவர் பெண்களின் போராட்டத்திற்கு துணை நின்று அவர்களின் அடிமைத்தனத்தைக் களைந்தெறிய உதவுவதோடு அவரின் மையக்கொள்கையே சமுதாயத்தில் பெண்களின் நிலை மாற்றம் என்பதைப் பற்றியதாக இருக்க வேண்டும்" என்று பிரேமா கூறுகிறார் (Kaviyarasu Kannadasan, 1982; Prema, 2000).

எனவே பெண்ணியம் என்பது பெண்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள் சார்பாக போராடும் ஒரு போராட்டம். இப்போராட்டத்திற்குப் பெண்ணியவாதிகள் துணை நிற்க வேண்டும். இதனால் பெண்கள் வீட்டிலும், சமூகத்திலும் நசுக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். அவற்றால் ஆண்களும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு சமம் என்ற நிலை உருவாக வேண்டும் என்பது தெளிவு.

## தாய்மை

பெண்மையின் சிறப்பே தாய்மையில் தான் அடங்கும். பெண்கள் என்னும் சிப்பிக்குள் முதிர்ந்த முத்துதான் தாய்மை குணம். இயேசு காவியத்தில் தாய்மையைக் குறித்து

"மெய்யருள் மகளே, வாழ்க!
    ஏலுமோர் பிள்ளைக் கேநீ
இயேசுஎன் கின்ற பேரைப்
    பாலுடன் ஊட்டிச் சூட்டிப்

பாவிகள் பாவம் தீர்க்கச்

சீலமிக் கோனாய் என்றும்

வளர்த்துவா சிறக்க காண்பாய்!" என்று ஆசிரியர் கூறுகிறார் (Prema, 2000). அன்பும் அரவணைப்பும் தாய்மையின் நற்குணங்கள். தாயின் அன்பு தன்னலமற்ற அன்பாக இருக்கிறது. பத்து மாதம் தவமிருந்து பெற்றெடுக்கும் தாயானவள் இதய கோவிலில் இருத்தித் தினமும் போற்றித் தொழ உகர்ந்த அன்பு தெய்வமாகும்.தாயானவள் அன்பின் வடிவாய், பொறுமையின் சிகரமாய், தன்னலம் இல்லாத தனியொருப் பிறவியாத் தனதாக்கி தன் பிள்ளைகளின் உயர்வில் மகிழ்வு கொள்பவள். எனவே தான் சமயத் தலைவர்களும், கவிஞர்களும், தத்துவ ஞானிகளும் தாயன்பையே தன்னலமற்ற அன்பாகக் கூறுகின்றனர். ஒரு பெண் தாயாகும் போது கைமாறு எதையும் கருதாது தியாகியாகி விடுகிறாள்" என தாயின் மன இயல்பை ச.அகத்தியலிங்க முதலியார் குறிப்பிடுகின்றார் (Sa. Agathiyalingam Mudhaliyar, 1985). தாயன்புக்கு ஈடு இணை இல்லை என்பது மனிதச் சமுதாயம் கண்டு கொண்ட உண்மையாகும். அவளுடைய தாய்மை உணர்வு குழந்தையின் மன வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் வலுவூட்டுகிறது. தாயின் அன்பும் பாசமும் கிடைக்காத நிலையில் பிள்ளைகள் மன நோய்க்கு ஆட்பட்டு தவறான பழக்கங்களுக்கு அடிமையாகி வருகின்றனர். இப்படி தாய்மை என்பது மிகப்பெரிய உன்னதமான படைப்பு என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

## கற்பு

ஒரு நாடு தன்னிறைவுடன் வாழ வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் முதலில் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஒழுக்கம் என்பது ஆண், பெண் இருபாலருக்கும் சொந்தமானதேயன்றி பெண்களுக்கு மட்டுமல்ல. இதையே

"கற்பெனப்படுவது காணமொரு புணரக்

கௌற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

என்று தொல்காப்பியர் கற்புக்கு இலக்கணம் கூறுகிறார் (Ilampuranar, 2000). இதுபோன்று இயேசு காவியத்தில் சாமானியப் பெண் ஒருத்தியிடம் தண்ணீர் கேட்க

"எனக் கென்றோர் கணவனில்லை ஐயா" என்றாள்.

"எல்லாமும் சரிதான் ஓ! இளைய பெண்ணே

உனக்கென்றே கணவன்மார் ஐவர் வாழ்ந்தார்

உன்னுடனே வாழ்பவனும், கணவன் அல்ல!

தனக்கென்று ஏதுமில்லாப் பெண் நீ! என்றார்"

என்று ஆசிரியர் பெண் தனது தவறை ஒத்துக்கொள்வது போன்று எந்த ஆணும் தனது தவறை ஒத்துக் கொள்வது இல்லை (Kaviyarasu Kannadasan, 1982).

## ஈகை

அறச் செயல்களுள் முதன்மையானதாகக் கருதப்படுவது ஈகை. இல்லையென்று நம்மை நாடி வருபவர்களுக்கு கூறாது அவருக்கு வேண்டியப் பொருளை நாம் கொடுத்து உதவுவது தான் ஈகை. இதையே

"வெள்ளத்தில் சிதறி கீழே
விழுந்ததைச் செல்வர் போட்டார்?
உள்ளதே குறைவென் றாலும்
உத்தமி முழுவதும் போட்டாள்!"

என்று ஆசிரியர் ஈகை குறித்து விதவைப் பெண்ணின் மனநிலையை அழகாக விளக்குகிறார் (Kaviyarasu Kannadasan, 1982). .

## விதவையின் கொடை

பிறருக்கு உதவுதல் என்பது சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது தான். இதையே, இயேசு காவியத்தில்.

"இவர்களோ இறைவன் தன்னை
ஏமாற்றப் பணத்தைப் போட்டார்!
அவளந்த இறைவன் நெஞ்சின்
அன்பினை மனதாற கேட்டாள்!
இவர்களுள் அவளே என்றும்
இறைவனுக் கேற்ற பெண்ணே!"

என்று விதவைப் பெண்கள் ஒவ்வொரு நாளும் போராட்டத்துடன் வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் (Kaviyarasu Kannadasan, 1982). இவர்களை ஆபாச குணமாகக் சமூகம் கருதுகிறது. ஆனால் இறைவனோ இந்த எளியப் பெண்ணின் காணிக்கையை தான் ஏற்றுக் கொண்டார்.

## விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்

பெண்கள் பலப் பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றார்கள். ஆனால், ஆண், பெண் இருவரும் சம்மந்தப்பட்ட எந்த முறை தவறிய நிகழ்வுகளுக்கும் பெண் மட்டுமே குறைந்த மதிப்பீடு செய்யப் படுகிறாள். இதையே,

"ஐய இந்த மகள் அறங் கெட்டவள்
கையு மெய்யு மாகக் கிடைத்தனள்
செய்வ தென்ன செப்புக" என்றனர்
தெய்வ மைந்தன் சிந்தை கலந்ததே"!

என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து அறங்கெட்ட காரியம் செய்தவர்கள் இருவர் (Kaviyarasu Kannadasan, 1982). அதில் பெண்ணை மட்டுமே இழிவாக விபச்சார பெண் என்று பட்டம் சூட்டுகின்ற நிலையினை, சமதர்ம மற்ற சமூக சிந்தனைப் காண முடிகிறது.

## சமூக சேவையில் பெண்கள்

சமூகச் சேவை செய்வதில் பெண்கள் தான் முன்னிலையில் உள்ளனர். அன்னிபெசென்ட், சாரதா தேவி, அன்னை தெரசா போன்ற பல பெண்கள் சமூக சேவையின் முன்னோடியாக உள்ளனர். இவர்களின் பணிகள் பெண்களின் ஆற்றலை வெளிப்படுத்துவனாகவும், பெண் விடுதலைக்கு வித்திடுவானாகவும் உள்ளன. இவர்களை அடியொற்றி இப்போது பல பெண்கள் சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய சமூகத் தொண்டுகளே பெண்களுக்கு குறிப்பாக விதவைப் பெண்களுக்கு மன அமைதியைக் கொடுப்பனவாகும். இதனை வலியுறுத்தவே 'கிளாரிந்த' என்ற நாவலை மாதவையா அவர்கள் எழுதியுள்ளதாக அ.மரிய அற்புதம் அவர்கள் தம் ஆய்வில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இன்று பெண்கள் வியாபாரத்திலும், விளம்பரத் துறையிலும், காவல்த் துறையிலும், இராணுவத்திலும், நீதித்துறையிலும் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள் (Maria Arputham, 1985).

## பணிவு

பணிவு, அடக்கம் என்பது எல்லோருக்கும் நன்மை தரும். பணக்காரனிடத்தில் அது இருந்தால் அவர்களுக்கு மேலும் செல்வம் கிடைத்தது போன்று இருக்கும். இதையே ஆசிரியர்

"வந்தவள் இயேசு முன்னே
மண்டியிட் டமர்ந்து மெல்ல
செந்திருக் கையால் ஐயன்
திருவடி தொட்டு மேலும்
சிந்திய கண்ணி ராலே
சிறப்புறக் கழுவி மின்னும்
கந்தமார் கூந்த லாலே
கைக் கொண்டு துடைத்தும் விட்டாள்." என்று இயேசுவின் பாதத்தில் விழுந்த தன கண்ணீரை தனது கூந்தலால் துடைத்து விட்ட நிகழ்வு அப்பெண்ணின் பணிவைக் குறிக்கிறது (Kaviyarasu Kannadasan, 1982). விலையுயர்ந்த வாசனைத் தைலத்தை கொண்டிருந்த அந்த செல்வ மகளின் பணிவான குணமே அனைவரின் முன்னிலையிலும் இயேசு நாதரின் பதம் பணிய செய்தது.

## முடிவுரை

சமயத்தின் பெயராலும், பண்பாட்டின் பெயராலும் பெண்கள் பலவகையிலும் கட்டுப்பாட்டுக்கும், நெருக்குதலுக்கும் ஆளான காலம் சில நூற்றாண்டுகள் தொடர்ந்தன. பெண்ணின் சமூக நிலையை மறு வாசிப்புக்கு உட்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. இது ஆணிய பண்பாட்டுக் கட்டமைப்பில் பாலிய உருவாக்கம்

ஊடுருவியிருப்பதையும், அதனால் பழைய மதிப்பீடுகள் புதிய பண்பாட்டு மதிப்பீடுகளால் எத்தகைய மாற்றத்தைப் பெறுகின்றன. என்பதையும் அறிய உதவுகின்றது. இவற்றைத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள், நவீன இலக்கியங்கள் ஆகியவற்றில் வைத்து எண்ணிப் பார்க்க முடிகிறது.

## References


Ilampuranar (2000), Thoikapiyam- porulathigaram, ILAMPURANAM 2, MUllai Nilayam, T Nagar, Chennai, India.

Kaviyarasu Kannadasan (1982), Yesu Kaviyam, Kalai Kaviri, Tiruchirappalli, 620 001, India.

Maria Arputham, A., (1985), Women's Problems in Madhavaya Novels, M.Phil Thesis, Department of Tamil, National College, India.

Mudhaliyar, S.A., (1985), 17th Conference, Aaivukkovai, Volume 1, Annmalai Nagar, India.

Muthu Chidambaram (2003), The origins and development of feminism, Tamil Puthagalayam, T Nagar, Chennai, India.

Prema, R., (2000), Feminism (First Edition), Tamil Puthagalayam, T Nagar, Chennai, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


## About the License:


Attribution 4.0 International (CC BY 4.0)

© The authors 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License